# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு

## கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!










இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும் அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும் தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று (21.06.2025) கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட சமூக வலைத்தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சகோதரர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களைப் பார்வையிட்டுஅவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.

---

### மறைந்தும் தமிழர்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நடைபெற்ற கண்ணொளி திட்டத்தின் கீழ் கண் சிகிச்சை முகாமில் 2031 நபர்கள் பயனடைந்தார்கள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தகவல்!

திருவள்ளூர், ஜூன் 22-

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் திமுக கழகத்தின் சார்பில் மாபெரும் கண்ணொளி திட்டத்தின் கீழ் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது இதில் பொதுமக்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் ஆட்டோ ஓட்டுநர்கள் பல தரப்பினர் மக்கள்கள் தூய்மை பணியாளர்கள் பள்ளி மாணவ மாணவிகள் பயன் பெற்று வந்துள்ளனர்

கலைஞர் தனது ஆட்சியில் மக்களின் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்காக மருத்துவத் துறையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி அவற்றை சிறப்பாக செயல்படுத்தி இருக்கிறார்.

கலைஞர் ஆட்சியில் தமிழ்நாட்டில் 10,784 மருத்துவமனைகளை உருவாகியுள்ளன. பத்து நடமாடும் மருத்துவமனைகளையும் தொடங்கி, சென்னையை இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக செயல்பட வைத்தார். தமிழ்நாடு சாதனை படைக்க கலைஞரின் திட்டங்கள் முக்கியக் காரணமாக அமைந்தன.

1971 முதல் 1976 வரை தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கண்ணொளித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கண் பார்வைக் குறைபாடு கொண்டவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, மூக்குக் கண்ணாடிகள்வழங்கப்பட்டன. பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு கண் பரிசோதனை நடத்தப்பட்டு இலவச கண்ணாடிகள் கொடுக்கப்பட்டன. இதன் மூலம் ஆயிரக்கணக்கான



மக்கள் பலன் அடைந்தனர்.

1990ஆம் ஆண்டில் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒளியேற்றும் வகையிலும் ஒரு திட்டத்தையும் கொண்டு வந்தார். பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளை மணந்தால் ரூ.6,000 நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவித்தார். பின்னர், இந்தத் திட்டத்தை அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தினார். இரண்டு மாற்றுத்திறனாளிகள் திருமணம் செய்துகொண்டாலும் இந்த நிதியுதவி முத்தமிழ் அறிஞர் டாக்டர் அவர்கள் வழங்கினார்

இந்நிலையில் நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் கண்ணொளி திட்டத்தை செயல்படுத்தும் வகையில் ஒன்றிய தோறும் முகாம்கள் நடத்த வேண்டும் உத்தர விட்டார்

அதன் அடிப்படையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் முழுவதும் கண் சிகிச்சை முகாமில் நடைபெற்று வருகிறது இதில் சிறப்பு வாய்ந்த மருத்துவர்கள் உதவியுடன் பொதுமக்கள் அனைவரும் கண் பரிசோதனை செய்து கொண்டு வருகிறார்கள் . பொதுவாக கண் சிகிச்சை செய்து கொள்வதற்கு பெண்களுக்கும் ஆண்களுக்கும் போதிய நேரம் இல்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது திமுக சார்பில் நடைபெறும் இது போன்ற முகாம்களில் எழை எளிய பொதுமக்கள் பயனடைந்து வருகிறார்கள்

மேலும் இளைஞரணி சார்பில் நடைபெற்ற முகாமில் 120-க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு 40 பயனாளிகளுக்கு இலவச கண் கண்ணாடியும்,

திருமழிசை பேரூரில் நடைபெற்ற முகாமில் 140-க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு 80-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டது,

அதேபோல் ஆவடி கிழக்கு பகுதியில் நடைபெற்ற முகாமில் 380-க்கு மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு 142 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டு 20 நபர்களுக்கு அறுவை சிகிச்சைக்காகவும் பரிந்துரைக் கப்பட்டது.

அதேபோல் திருவள்ளூர் மேற்கு ஒன்றியத்தில் நடைபெற்ற முகாமில் 110-க்கு மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு 70 பேருக்கு இலவச கண் கண்ணாடி வழங்கி

30 நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சைக்காக வும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆவடி வடக்கு பகுதியில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் 250-க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டதில் 140-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டு 19 நபர்களுக்குஅறுவைசிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

அதேபோல் ஆவடி தெற்கு பகுதியில் நடைபெற்ற முகாமில் 250-க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டதில் 175 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. பூந்தமல்லி கிழக்கு ஒன்றியத்தில் நடைபெற்ற முகாமில் 231 நபர்கள் கலந்து கொண்டதில் 131 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு 41 நபர்களுக்கு இலவச அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

பூந்தமல்லி நகரத்தில் நடைபெற்ற முகாமில் 223 நபர்கள் சிகிச்சை மேற்கொண்டு 183 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு 20 நபர்களுக்கு அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் கிழக்கு ஒன்றியத்தில் நடைபெற்ற முகாமில் 105 நபர்கள் சிகிச்சை மேற்கொண்டு 20 நபர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டு 25 நபர்களுக்கு அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளது .

ஆவடி மேற்கு பகுதி நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் 180 நபர்கள் சிகிச்சை மேற்கொண்டு 14 நபர்களுக்கு கண்கண்ணாடி வழங்கப்பட்டு 11 நபர்களுக்கு அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது

திருவேற்காட்டில் நடைபெற்ற சன் சிகிச்சை முகாமில் 211 நபர்கள் சிகிச்சை மேற்கொண்டு 107 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டு 12 நபர்களுக்கு அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளது

எனவே இதுவரைக்கும் நடைபெற்ற முகாமில் 2031 நபர்கள் சிகிச்சைகள் மேற்கொண்டு 1140 நபர்களுக்கு இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டு 208 நபர்களுக்கு இலவச கண் அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக் கப்பட்டுள்ளார்கள் என அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தெரிவித்தார்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் தலைமை!

# கொளத்தூர் தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி - நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் - கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி - மேயர் பிரியா ராஜன்

## விஜயா தாயன்பன் - பேராசிரியர் பர்வின் சுல்தானா - திவ்யா சத்யராஜ் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 22 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர் தொகுதியில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் முன்னிட்டு செம்மொழி 19 "மகளிர் கைகளில் சுழல் நீதி! மாறும் வரலாற்றுப் புது விதி!" எனும் தலைப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (23.06.2025 திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு, கார்த்திகேயன் சாலை, திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தலைமை பொதுக்குழு உறுப்பினர், 6 வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ் குமார், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, எஸ். பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், சுதா தீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் எம். தாவுத்பீ, யோக பிரியா தனசேகர், பி.அமுதா பொன்னிவளவன், சி.ஸ்ரீதணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், கழக மருத்துவர் அணித் தலைவர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மாநில மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், பேராசிரியர் பர்வின் சுல்தானா, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் திவ்யா சத்யராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அயலக அணித் தலைவர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத்திட்ட திருத்தக்குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், கொளத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் இரா.விடுதலை, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, கூ.பீ. ஜெயின் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, எஸ். இராஜசேகர், எஸ்.முரளி, டி. எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், கோ.மணி, டி.வி. செம்மொழி எம்.சி, பி. ஜெ.துளசிங்கம், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன் மணி நன்றி கூறுகிறார்.

---

### திருத்தணியில் புதிதாக கட்டப்பட்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில்

# திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. திடீர் ஆய்வு மேற்கொண்டார்

திருத்தணி, ஜூன் 22;-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணியில், ரூ.45 கோடியில் புதிதாக கட்டப்பட்ட மாவட்ட அரசு மருத்துவமனை கட்டிடத்தில் மின்மில் வயர் இணைப்பு பணிகள் நடந்து வரும் நிலையில், மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ ஆய்வு செய்தார். மாவட்ட அரசு மருத் துவமனையாக தரம் உயர்த் தப்பட்ட திருத்தணி அரசு மருத்துவமனைக்கு ரூ.45 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 4 அடுக்குமாடி கட்டிடம் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

பொதுப்பணித்துறை சார்பில் கட்டப்பட்ட, மாவட்ட மருத்துவமனையின் புதிய கட்டிடத்தில் அறுவை சிகிச்சை அரங்கம். ரத்தவங்கி, புறநோயாளிகள் சிகிச்சை பிரி பிரிவு, சி.டி. ஸ்கேன், குழந்தைகள் நலப் பிரிவு, மகப்பேறு பிரிவு உள்பட பல்வேறு பிரிவுகள் அமைத்து உயர்ந்த மருத்துவ சேவை அளிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், புதிய கட்டித்தில் மின் வயர் இணைப்பு பணிகள் நடந்து வருகிறது. இதனால், பொதுமக்களுக்கான மருத்துவ சேவை தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அரசு மருத்துவமனையின் புதிய கட்டிடத்தின் 4 அடுக்களையும் ஆய்வு செய்தார்.

அப்போது, ஓரிரு நாட்களில் மின் இணைப்பு வழங்கப்படும். என்றனர். தொடர்ந்து, உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகள் வார்டு, லேப், ஸ்கான், எக்ஸ்ரே அறைகளில் கதவுகள், தண்ணீர், கழிப்பறைகள் தரத்தை ஆய்வு செய்தார். புதிய கட்டிடத்தில் விடுபட்டுள்ள சிறுசிறு குறைகள் உடனடியாக முடிக்க பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். குறிப்பாக, எலக்ட்ரிக்கல் பணி முழுமை பெறாமல் உள்ளதை, ஆய்வின் போது கண்டறியப்பட்டது. மின் தடை ஏற்படும் போது மருத்துவமனையில் மின் விநியோகம் செய்ய ஜெனரேட்டர் அறை, மின் வயர்கள். பார்வையிட்டு ஒரு மாதத்தில் மருத்துவமனையின் அனைத்து நிலுவை பணிகளையும் முடித்து மருத்துவ சேவையை முழுமையாகசெயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். என்றார். இதில் நகரச் செயலாளர் வி.வினோத்குமார் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தேவன், உதவி செயற்பொறியாளர் முரளி, மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.